**செய்தி வெளியீடு எண்: 550** **நாள் : 30.10.2014**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

**2015–ம்** ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் வேட்டி சேலைகளை உற்பத்தி செய்தல் தொடர்பான திட்ட முன்னேற்றம் குறித்த ஆய்வு **30.10.2014** அன்று கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலக கூட்ட அரங்கில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் **திருமதி. எஸ்.கோகுல இந்திரா** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு. ஹர்மந்தர்சிங், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் திரு. கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மற்றும் துறையின் கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர்கள் (மற்றும்) சரக உதவி இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி கூட்டத்தில் நடப்பு ஆண்டு திட்டத்தின் கீழ் உற்பத்திக்குத் தேவையான நூல் கொள்முதல், தறிகளில் நாளது தேதிவரை மேற்கொள்ளப்பட்ட வேட்டி சேலைகள் உற்பத்தி மற்றும் கொள்முதல் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட வேட்டி சேலைகளை வருவாய்த்துறையினர் தெரிவிக்கும் மாவட்ட வாரியான தேவையின் அடிப்படையில் விநியோகம் செய்ய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் இத்திட்டத்திற்கு தேவையான மொத்த குறியீட்டினையும் **2014**ம் ஆண்டு டிசம்பர் **31**ம் தேதிக்குள் நிறைவு செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முழுவீச்சில் நடைபெற்றுவருகிறது என்றும் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விலையில்லா வேட்டி சேலைத்திட்டம் பொங்கல் 2015ன் உற்பத்திக்கு தேவையான பாவு மற்றும் ஊடை நூல்கள், நெசவாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய கூலி ஆகியவை உடனுக்குடன் வழங்கி மொத்த இலக்கினை உரிய காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டுமென துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். விலையில்லா வேட்டி சேலைகள், வரும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஜனவரி முதல் வழங்கப்படவேண்டியுள்ளதால் உற்பத்தியினை துரிதப்படுத்துவதடன், உற்பத்தி செய்யப்படும் வேட்டி சேலைகள் தரத்துடன் வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

விலையில்லா வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தின்மூலம் தமிழகத்திலுள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கப்படுவதுடன் நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைவதால் திட்டத்தினை சீரிய முறையில் செயல்படுத்தப்பட வேண்டுமென்று தெரிவித்தார். மேலும், திட்ட உற்பத்தியினை விரைந்து முடிப்பதற்கு தேவையான அனைத்து ஆலோசனைகளையும் வழங்கி, திட்டத்தினை செவ்வனே செயல்படுத்தி அரசுக்கு நற்பெயர் பெற்றுத்தர வேண்டுமெனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

– – –

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**